**தலைப்பு 155 - மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 ஆந்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2019 மே 31 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சிற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 31 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(ஈ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரும் கணக்கீட்டு உத்தியோகத்தரும் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்

- மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) முன்னைய ஆண்டிற்கு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களை முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் இணங்குவதாக கூறுவதற்கு முடியாதுள்ளது

(ஆ) அமைச்சினால் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிக்கூற்றுக்கள் சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணங்கியிருக்காமை

2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிகப்பட வேண்டிய போதிலும் அத் தேவைப்பாட்டை மீறிய சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஏனைய வருமான கணக்கீட்டு உத்தியோகத்தருக்காக சேகரிக்கப்பட்ட ரூபா 52.61 மில்லியன் பணம் நிதி செயற்றல் கூற்றில் வரியற்ற வருமானமாக காட்டப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுதல் வேண்டும். | சரி செய்யப்பட வேண்டுமென ஏற்றுக்கொள்கிறேன். |

### 1.6.2 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) நிதி நிலைமை கூற்றுக்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் ஆண்டின் போது பெற்றுக்கொள்ளப்பட்ட சொத்துக்கள் ரூபா 3.75 | அமைச்சினால் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்காக | எதிர்காலத்தில் அனைத்து சொத்துகள் தொடர்பான ஒரு பதிவேட்டினை பராமரிப்பதற்கும் அவற்றினை |

| | | | |
|---|---|---|---|
| | மில்லியனாக இருந்ததுடன் ஆண்டின் போது வாங்கப்பட்ட சொத்துக்கள் மற்றும் ஏனைய மூலதன செலவுகள் ரூபா 12,049.90 மில்லியனாக இருந்தது. அதற்கினங்க ரூபா 12,046.15 மில்லியன் வித்தியாசம் அவதானிக்கப்பட்டது, | மேற்கொள்ளப்பட்ட மூலதன செலவுகள் சம்பந்தமாக முறையான சொத்துக்களைஒப்படைப்பு செய்தல் வேண்டும் | சரியாக ஒப்படைப்பதற்கும் இனங்குகின்றேன். |
| (ii) | நிலையான சொத்துக்கள் பதிவேட்டுடன் ஒப்பீடு செய்த போது மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 612,698 தொகையான சொத்துக்கள் நிதியற்ற சொத்துக்கள் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை | சரியாக நிதிக் கூற்றுக்களை சமர்ப்பிப்பதற்காக முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்படுதல் வேண்டும் | 2019 ஆம் ஆண்டில் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. |

**(ஆ) காசுப் பாய்ச்சல் கூற்று**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதி செயலாற்றல் கூற்றின் பிரகாரம் மீண்டுவரும் செலவுகள் ரூபா 922.84 மில்லியனாக இருந்த போதிலும் காசுப் பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டுச் செலவுகள் ரூபா 189,094.69 மில்லியனாக காட்டப்பட்டிருந்தது, | சரியாக நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | தவறுதலாக செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் காட்டப்பட்டுள்ளது. |

### 1.6.3 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

அமைச்சினால் கீழே தரப்படும் சில பதிவேடுகள் பேணப்படாதிருந்ததுடன் சில பதிவேடுகள் முறைப்படியாகவும் நாளதுவரையாகவும் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது,

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (i) **கணனி, துணைக் கருவிகள், மென்பொருட்கள் என்பன தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடு** | | |
| 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையின் பிரகாரம் | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையின் | உரிய உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | கணனி, துணைக் கருவிகள் மென்பொருட்கள் என்பன தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை | பிரகாரம் கணனி துணைக்கருவிகள் மென்பொருட்கள் என்பன தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளதுவரையாக பேணப்படுதல் வேண்டும். | |
| (ii) | **கணக்காய்வு ஐய வினாக்கள் பதிவேடு**<br>---------------------------------------- | | |
| | நிதிப் பிரமாணம் 452(1) இன் பிரகாரம் கணக்காய்வு ஐய வினாக்கள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை | நிதிப்பிரமாணம் 452(1) இன் பிரகாரம் கணக்காய்வு ஐய வினாக்கள் பதிவேடு நாளது வரையாக பேணப்படுதல் வேண்டும் | உரிய உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |
| (iii) | **கடமைத் தொலைபேசி பதிவேடு**<br>------------------------------------------------ | | |
| | நிதிப்பிரமாணம் 845(1) இன் பிரகாரம் கடமைத் தொலைபேசி பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை | நிதிப்பிரமாணம் 845(1) இன் பிரகாரம் 26 ஆவது பின்னினைப் பிலுள்ளவாறு கடமைத் தொலைபேசிப் பதிவேடு பேணப்டுதல் வேண்டும். | உரிய உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |
| (iv) | **பிணைப் பதிவேடு**<br>---------------------------------- | | |
| | நிதிப்பிரமாணம் 891(1) இன் பிரகாரம் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் தகவல்களை உள்ளடக்கிய பிணைப் பதிவேடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 891(1) இல் குறிப்பிட்ட தகவல்களை உள்ளடக்கும் வலையைில் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் தொடர்பாக பிணைப் பதிவேடு பேணப்படுதல் வேண்டும் | உரிய உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |
| (எ) | **மின்சார உபகரணங்கள் தொடர்பான பதிவேடு**<br>------------------------------------------ | | |
| | நிதிப்பிரமாணம் 454(2) இன் பிரகாரம் மின்சார உபகரணங்கள் தொடர்பான பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 454(2) இல் குறிப்பிடப்பட்டவாறு அரசாங்க கட்டிடங்கள் அனைத்திலுமுள்ள மின்சார துணைக் கருவிகள் மற்றும் உபகரணங்கள் | உரிய உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | | தொடர்பான பொருள் இருப்பு பதிவேடு பேணப்படுதல் வேண்டும் | |
| (vi) | **பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு** | | |
| | நிதிப் பிரமாணம் 214 இன் பிரகாரம் பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணம் 214 இன் பிரகாரம் பொறுப்புக்களை நாளாந்தம் பரீட்சிக்க கூடியவாறு பொறுப்புக்கள் பதிவேட்டில் அப்பொறுப்புக்கள் பதியப்படுதல் வேண்டும் | உரிய உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |

**1.6.4 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய சான்றுபடுத்தல்கள்**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் பின்வரும் விடயங்கள் சம்பந்தமாக சான்றுபடுத்த வேண்டியிருந்தும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | அமைச்சின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையை தயாரித்து பேணப்பட வேண்டும் என்பதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியிருந்ததுடன் அம் முறைமையின் வினைத்திறன் தொடர்பாக காலத்துக்கு காலம் மீளாய்வு செய்து அதற்கிணங்க முறைமையை வினைத்திறனாக செயற்படுத்துவதற்கு தேவையான மாற்றங்கள் செயய்யப்பட வேண்டும் எனவும் அந்த மீளாய்வுகளை எழுத்து மூலம் மேற்கொண்டு அதன் பிரதியை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்தும் அவ்வாறான மீளாய்வு மேற்கொள்ளப்பட்டது. என்பதற்கான கூற்றுக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் |
| (ஆ) | வருடாந்த மற்றும் ஏனைய நிதிக் கூற்றுக்கள் தேவையான கால நேரத்துக்குள் தயாரித்தல் இடம் | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | |
|---|---|
| பெறுகின்றது என்பதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் சான்றுபடுத்த வேண்டியதுடன் அதற்கு மேலதிகமாக கணக்காய்வு செய்யப்படுகின்ற நிறுவனத்திற்குரிய ஆண்டறிக்கையை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிப்பதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் கவனத்திற்கொள்ள வேண்டிய போதிலும் அறிக்கையின் 3.6 மற்றும் 3.7 ஆம் பந்திகளில் குறிப்பிட்ட கணக்காய்வு அவதானிப்புக்களின் காரணமாக அத்தேவைப்பாடு நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | சட்டத்தின் 38 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.6.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

**அவதானிப்புக்கள்**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 702(3) | ஒப்பந்த உடன்படிக்கை 3 பிரதிகளில் கையெழுத்திட்டு ஒரு பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | நிதிப்பிரமாணத்திற்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | தற்பொழுதும் உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |

**2. நிதி மீளாய்வு**

**2.1 செலவு முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 7 மூலதன செலவு விடயங்களுக்குரிய மொத்த நிதி ஏற்பாடான ரூபா 154.18 மில்லியன் சேமிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | இராஜாங்க அமைச்சர் அலுவலகம் செயற்படாமையினை உள்ளடக்கி பல்வேறு காரணங்களின் அடிப்படையில் நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) 19 மூலதன செலவு | நிர்ணயிக்கப்பட்டவாறு | பெறுகை நடைமுறைகளிலுள்ள |

| | | |
|---|---|---|
| விடயங்களுக்குரிய ரூபா 1,702 மில்லியன் சேமிக்கப்பட்டிருந்ததுடன் அதன் சதவீதம் 20 சதவீதத்திற்கும் 98 சதவீதத்திற்குமிடையிலான வீச்சினைக் கொண்டிருந்தது. | நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | தாமதம் மற்றும் கட்டுநிதிகிடைக்காமையின் காரணமாக நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. |

**2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளை ஏற்படுத்துதல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 5 செலவு விடயங்களின் நிதி ஏற்பாடு ரூபா 618.27 எல்லையினை மிகைத்து ரூபா 1,550.96 மில்லியன் பொறுப்புக்கள் உருவாகியிருந்தது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | பாதிட்டு நிதி ஏற்பாட்டு சேமிப்பினை விட பொறுப்புக்களின் பெறுமதி மிகைத்திருந்தது என்பதனை ஏற்றுக்கொள்கின்றேன். அதற்கான காரணம் ஆண்டின் இறுதியில் விலைப் பட்டியல்களைத் தீர்த்து வைப்பதற்கு போதியளவு கட்டுநிதி கிடைக்காமையாகும். |
| (ஆ) | ஒப்பந்த உடன்படிக்கைகளின் அடிப்படையில் உருவாகியிருந்த ரூபா 19.63 மில்லியன் கடப்பாடுகள் ஒதுக்கிட்டுக் கணக்கில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | உரிய பிரிவுகளிலிருந்து நிர்ணயிக்கப்பட்ட தகவல்கள் அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை |

**2.3 வைப்பு மீதிகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் இரண்டு ஆண்டுகளுக்கு மேற்பட்ட வைப்புக்களை வருமான கணக்கிற்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும் இரண்டு ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 185,356 தொகையான வைப்புக்கள் வருமான கணக்கிற்கு செலவு வைக்கப்படவில்லை | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 தூர நோக்கும் செயற்பணியும்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அமைச்சினால் நிறைவேற்ற வேண்டிய கடமைப் பொறுப்புக்கள் இடம் பெற்றதன் பின்னர் எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகளை உள்ளடக்கும் வகையில் தூர நோக்கும் செயற் பணியும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை | அமைச்சினால் நிறைவேற்றப்பட வேண்டிய கடமைப் பொறுப்புக்கள் மேற்கொள்ளப் பட்டதன் பின்னர் எதிர்பார்த்த பெறுபேறுகளை உள்ளடக்கும் வகையில் தூர நோக்கும் செயற்பணியும் தயாரிக்கப்படுதல் வேண்டும் | அமைச்சினால் நிறைவேற்றப்பட வேண்டிய கடமைப் பொறுப்புக்கள் மேற்கொள்ளப்படடதன் பின்னர் எதிர்பார்த்த பெறுபேறுகளை வெளிப்படுத்தும் வகையில் அமைச்சின் தூர நோக்கும் செயற் பணியும் தற்பொழுது தயாரிக்கப்பட்டுள்ளன. |

### 3.2 எதிர்பார்த்த வெளியீட்டு மட்டத்தை அடைந்து கொள்ளாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| புரநெகும செயற்திட்டத்தின் 10 உப செயற் திட்டங்கள் மற்றும் வளர்ந்து வருகின்ற வலயங்களில் கிராமிய உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்தின் 4 செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படாததுடன் 6 செயற்பாடுகளின் அடைந்து கொள்ளப்பட்ட சதவீதம் ஆகக் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | செயல் நடவடிக்கைகளைத் திட்டத்தின் பிரகாரம் எதிர்பார்த்த செயல் முன்னேற்றத்தை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | எதிர்பார்த்த செயல் முன்னேற்றம் பெற்றுக்கொள்ளப்பட்டது. |

### 3.3 எதிர்பார்த்த பெறுபேறுகள் அடைந்து கொள்ளப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (i) 2014 இலிருந்து 2016 வரை ரூபா 449.48 மில்லியன் செலவு செய்து புரநெகும செயற்திட்டத்தின் மூலம் நிர்மாணிக்கப்பட்ட 14 | எதிர்பார்த்த பெறுபேறுகளை அடைந்து கொள்வதற்காக தேவையான நடவடிக்கை | அவற்றில் 3 நிர்மாணங்கள் தற்பொழுது பயன்படுத்தப்பட்டு வருவதுடன் ஏனைய நிர்மாணங்ளைப் பயன்படுத்துவதற்கு தேவையான |

| | | | |
|---|---|---|---|
| | நிர்மாணங்கள் 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் பல்வேறு காரணங்களால் விளைவற்றுக் காணப்பட்டன. | எடுத்தல் வேண்டும் | நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |
| (ii) | புரநெகும செயற்திட்டத்தின் கீழ் ஊவா, மேல், மற்றும் மத்திய மாகாணங்களில் ரூபா 75.37 மில்லியன் செலவில் நிர்மாணங்கள் பூர்த்திசெய்யப்பட்டு பிரதேச சபைகளுக்கு ஒப்படைக்கப்பட்ட 3 கட்டிடங்களில் உள்ளடங்கியுள்ள வாராந்த சந்தை கூட்ட மண்டபங்கள் சுகாதார சிகிச்சை நிலையம் என்பவற்றிற்குரிய பகுதிகள் எதிர்பார்க்கப்பட்ட குறிக்கோள்களுக்காக ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை | நிர்ணயிக்கப்பட்ட குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | உறுப்பினர்களின் எண்ணிக்கை விரிவுபடுத்தப்பட்டதன் அடிப்படையில் சபாமண்டபமாக கூட்ட மண்டபம் பயன்படுத்தப்படுவதுடன் பண்ணடாரவளை மரக்கறி உற்பத்தி வீழ்ச்சியடைந்தன் காரணமாக வாராந்த சந்தையை நடைமுறைப்படுத்த முடியாதுள்ளது. |
| (iii) | புரநெகும செயற்திட்டத்தின் கீழ் ரூபா 435.04 மில்லியன் செலவு செய்து 9 பிரதேச சபைகளுக்காக நிர்மாணிக்கப்பட்டு ஒப்படைக்கப்பட்ட பொது மக்களின் நலன்புரிக்கான 9 பல்நோக்கு கட்டிடங்கள் எதிர்பார்த்த செயற்பாடுகளுக்காக ஈடுபடுத்தப்படாது பிரதேச சபையின் அலுவலகத்தை செயற்படுத்துவதற்குப் பயன்படுத்தப்பட்டிருந்தது. | எதிர்பார்த்த பெறுபேறுகளை அடைந்து கொள்வதற்காக தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | பிரதேச சபை உறுப்பினர் பதவிகள் அதிகரித்ததன் அடிப்படையில் சபையின் கட்டிடங்களில் இடவசதிகள் போதாமையின் காரணமாக அலுவலகத்தை செயற்படுத்த வேண்டியிருந்தது. |
| (iv) | மத்திய மாகாணத்தின் உடபலாத பிரதேச சபையின் நீர் வழங்கல் செயற்திட்டத்திற்குரிய செயற்பாடுகளின் கீழ் காணப்பட்ட நீர் வழங்கல் முறைமையை மேம்படுத்துவதற்காக 2017 யூன் 30 ஆந் திகதியளவில் ரூபா 208.53 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது எவ்வாறாயினும் ஒப்பந்தக்காரர்களால் 2018 ஆம் ஆண்டின் இறுதியில் நீர் வழங்கல் செயற் திட்டத்தை உரிய பிரதேச | நலன்களைப் பெற்றுக்கொள்ளும் வகையில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | போதியளவு முன்னேற்றம் ஏற்படாதிருந்தும் தரத்தில் உயர்ந்த குடிநீரை வழங்கக்கூடியதாக இருந்தது. |

சபைக்கு ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தும் நீர் வழங்கலில் முன்னேற்றம் அல்லது பாவனையாளர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு இடம் பெற்றிருக்கவில்லை.

## 3.4 செயற்திட்டங்களைப் பூர்த்தி செய்யாது கைவிடுதல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அமைச்சினால் ஆரம்பிக்கப்பட்ட 6 நிர்மானச் செயற்திட்டங்கள் ரூபா 121.8 மில்லியன் செலவு செய்ததன் பின்னர் நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்படாது கைவிடப்பட்டன. | செயற்திட்டங்களைப் பூர்த்தி செய்து எதிர்பார்க்கப்பட்ட குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | நிர்மாணங்களுக்கு தேவையான பரிசோதனை நடவடிக்கை முடிவடையாமை, நிதி ஏற்பாடுகள் ஒதுக்கீடு செய்யப்படாமை, காணிகள் விடுவிக்கப்படாமை, பொது மக்களின் எதிர்பார்ப்புக்கள் என்பவற்றின் காரணமாக கைவிடப்பட்டிருந்தன. |

## 3.5 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| புனித இடங்களுக்கு அண்மையில் சுகாதார வசதிகள் நிலையங்களை நிர்மாணித்தல் உள்ளுராட்சிகள் தொடர்பான இலங்கை நிறுவனத்திற்கு ஒரு கட்டிடத்தை நிர்மாணித்தல், உள்ளுராட்சிப் பிரிவின் கீழ் அமுல்படுத்தப்படுகின்ற 04 நிகழ்ச்சித்திட்டங்களும், திண்மக்கழிவு முகாமைத்துவத்தின் கீழ் ஊவா மாகாணம், மேல் மாகாணம், வட மாகாணம், தென் மாகாணம் என்பவற்றில் கவசிமா இயற்திரங்களை நிறுவுவதற்காக கட்டிடங்களை நிர்மாணித்தல், உள்ளுராட்சி நிறுவனங்களுக்கு | செயல் நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் செயற்திட்டங்களை அமுல்படுத்துதல் வேண்டும் | பெறுகை நடைமுறைகளில் தாமதம், நிதி ஏற்பாடுகள் இல்லாமை, பொது மக்களின் எதிர்ப்புக்கள் என்பவற்றின் காரமாண தாமதமடைந்திருந்த போதிலும் இந்த ஆண்டின் போது நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளன. |

கம்பெக்டர் வழங்குதல், புரனெகும செயற்திட்டத்தின் கீழ் 05 உப செயற்திட்டங்களையும் கிராமிய உட்கட்டமைப்பு வசதிகளையும் அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்திற்காக ஆலோசகர்களைத் தெரிவு செய்தல் என்பன செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் தாமதமடைந்திருந்தன.

**3.6 வருடாந்த செயலாற்றல் அறிக்கை**

வருடாந்த செயலாற்றல் அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட பிழையற்ற தகவல்களும் அது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்களும் கீழே தரப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய 402 ஆம இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் அமைச்சினால் நிதி ஆண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் மீளாய்வாண்டிற்கான செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. | நிர்ணயிக்கப்பட்ட காலப்புதிக்குள் வருடாந்த செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படுதல் வேண்டும் | நிர்ணயிக்கப்பட்ட காலப்புதிக்குள் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**3.7 வெளிநாட்டு உதவிச் செயற்திட்டங்கள்**

வெளிநாட்டு உதவிச் செயற்திட்டங்கள் சம்பந்தமாக வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே தரப்படுகின்றன

**(I) கணக்குகள் சமர்ப்பிக்கப்படாத செயற்திட்டங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 626 இன் பிரகாரம் வெளிநாட்டு உதவிச் செயற்திட்டங்களின் வருடாந்த கணக்குகள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2014 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட கிராமிய பாலங்கள் செயற்திட்டத்தின் கணக்குகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. அத்துடன் | நிர்ணயிக்கப்பட்டவாறு கணக்குகளைச் சமர்ப்பித்தல் வேண்டும் | நிர்ணயிக்கப்பட்டவாறு கணக்கேடுகள் பேணப்பட்டுள்ளதனால் கணக்குகளைச் சமர்ப்பிக்க முடியும் |

4 செலவு விடயங்களின் கீழ் மீளாய்வாண்டின் போது ரூபா 5,816.67 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது.

**(ii) போதியளவு செயல் முன்னேற்றத்தினை அடைந்து கொள்ளாத செய்திட்டங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்தின் உதவியின் கீழ் வளர்ந்து வரும் வலயங்களில் கிராமிய உட்பட்டமைப்பு வசதிகளை அபிவிருத்திசெய்யும் செயற்திட்டத்திற்காக மீளாய்வாண்டிற்கான வெளிநாட்டுக் கடன் ரூபா 700 மில்லியனும் உள்நாட்டு நிதி ரூபா 80 மில்லியனுமாக ரூபா 780 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டடிருந்தது. ஆண்டின் போது செயற்திட்ட நடவடிக்கைகளில் செயல் முன்னேற்றம் அடைந்து கொள்ளப்படாததன் காரணமாக வெளிநாட்டுக் கடன் பணத்தை பயன்படுத்த முடியாதிருந்தது. சம்பளங்கள் மற்றும் நிருவாகச் செலவுகளாக உள்நாட்டு நிதியிலிருந்து ரூபா 58.7 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது. | நிர்ணயிக்கப்பட்டவாறு வெளிநாட்டு உதவிச் செயற்திட்டங்களை அமுல்படுத்துதல் வேண்டும் | பெறுகைகள் தாமதமடைதல் மற்றும் பெறுகை மேன்முறையீடுகளின் காரணமாக ஆலோசனைக் கம்பனியை நியமிக்கும் தாமதத்தினால் அமுல்படுத்த முடியாதிருந்தது. |

## 3.8 சொத்துக்கள் முகாமைத்துவம்

இது சம்பந்தமாக வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே தரப்படுகின்றன

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) விளையாட்டுத்துறை அமைச்சிற்கும் புனர்வாழ்வு மற்றும் மறுசீரமைப்பு அமைச்சிற்கும் சொந்தமான 2 வாகனங்களின் உரிமை பொறுப்பேற்க்பபடவில்லை | உரிமையைப் பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | தேவையான ஆவணங்கள் மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. |
| (ஆ) அமைச்சினால் சமூக நலன்புரி | வாகனங்கள் | உரிமையைப் பெற்றுக் |

| | | |
|---|---|---|
| மற்றும் கிராமிய கைத்தொழில் அமைச்சிற்கும் சனாதிபதி அலுவலகத்திற்கும் 5 வாகனங்கள் வழங்கப்பட்டிருந்தன | அமைச்சிற்கு பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் அல்லது ஒப்படைத்தல் வேண்டும் | கொள்ளுமாறு எழுத்து மூலம் தெரிவிக்கப்படடிருந்தது. |

**3.9 அரசாங்க உத்தியோர்களால் பிணைவைத்தல்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 880 இல் குறிப்பிட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் பிணை வைக்க வேண்டிய அரசாங்கத்தின் பணம் இல்லது பொருட்கள் முதலியவற்றைப் பொறுப்பேற்றல் அல்லது பொறுப்பாக இருக்கின்ற உத்தியோகத்தர்களிடமிருந்து பிணை வைப்புக்கள் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | தேவையாள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |

**3.10 முகாமைத்துவ பலவீனங்கள்**

இது சம்பந்தமாக வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே தரப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) அமைச்சரவையின் அங்கீகாரத்தின் பேரில் மாகாண மட்டத்தில் தோற்றுவிப்பதற்காக 9 சேதனப் பசளை உற்பத்தி இயந்திரங்கள் ரூபா 935.69 மில்லியனுக்கு மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. சாத்தியவள ஆய்வினை மேற்கொள்ளாது கொள்வனவு செய்தல், 2017 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட இயந்திரங்களை பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படாமை, வடக்கு, ஊவா, மேல் ஆகிய மாகாணங்களில் காணிகள் தீர்த்துவைக்கப்படாமையின் காரணமாக இயந்திரங்களைப் பொருத்துவதற்கு முடியாதிருந்தமை சேதனப் | புதிய செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர் சாத்தியவள ஆய்வினை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் கொள்வனவு செய்த இயந்திரங்களைப் பயன்படுத்துவதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தலும் எதிர்பார்த்த வருமானத்தை உழைப்பதற்கு நடவடிக்கை எடுத்தலும் வேண்டும். | ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்தின் அனுசரணையின் பேரில் மாதிரியாக நாட்டிற்கு வழங்கப்பட்ட கவசிமா இயந்திரத்தின் செயற்படுகின்ற தன்மை தொடர்பாக ஒரு ஆண்டு காலம் மேற்கொண்ட ஆய்வின் பின்னர் இந்த இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டதுடன் பின்னர் ஏற்பட்ட பொது மக்கள் எதிர்ப்பின் காரணமாக இயந்திரத்தைப் பொருத்துதல் தாமதமடைந்திருந்த போதிலும் எதிர்காலத்தில் இயந்திரங்கள் அனைத்தையும் |

| | | | |
|---|---|---|---|
| | பசளை ஒரு கிலோவின் விற்பனை விலை ரூபா 20 ஆக குறிப்பிடப்பட்டிருந்தும் உள்ளபடியான விலை 36 சதமாக இருத்தலின் காரணமாக எதிர்பார்த்த வருமானம் கிடைக்காமை, மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் பிழையானதாக இருத்தல், சேகரிக்கப்படுகின்ற குப்பைகள் தொடர்பாக போதியளவில் ஆய்வு செய்ததன் பின்னர் இயந்திரங்களைப் பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமை கேகாலை நகர சபைப் பிரதேசத்தில் சிபாரிசு செய்த கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கு போதியளவு இடவசதியற்ற இடத்தில் இயற்திரத்தைப் பொருத்தியிருந்தமை ஆகிய குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன. | | பயன்பாட்டிற்கு எடுத்தும் கொள்ளலாம். எதிர்பார்க்கப்பட்ட வருமானத்தை உழைப்பதற்காக தற்பொழுது திட்டமிடப்பட்டுள்ளதுடன் சேதனப் பசளைகளின் விலையை எதிர்காலத்தில் அதிகரிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. |
| (ஆ) | முறையான பெறுகை நடைமுறைகளை மீறி மற்றும் பெறுகை வழிகாட்டிக் கோவையின் 3.1 ஆம் பிரிவின் பிரகாரம் மற்றும் நிதி அமைச்சின் MF5/ERD/CP/17/60 ஆம இலக்க மற்றும் 2017 மார்ச் 27 ஆந் திகதிய அமைச்சரவைப் பத்திரத்தின் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட அவதானிப்புக்களின் பிரகாரம் பணத்திற்கு உச்ச அளவு விணைதிறனை சான்றுபடுத்தும் வகையில் சர்வதேச போட்டி விலைகளைக் கோருவதற்காக அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை. | சட்டங்கள். விதிகள், பிரமாணங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | ஜயிக்கா நிறுவனத்தின் அனுசரணையின் கீழ் நாட்டிற்கு வழங்கப்பட்ட இந்த இயந்திரத்தின் ஆக்கவுரிமைப் பத்திரமானது ஜப்பானிலுள்ள கென்ஜி கவசீமா அவர்களுக்குரியதாகும். மேலும் போட்டி விலை கோரலுக்காக அவ்வாறான இயந்திரத்தை உலகத்தில் தெரியும் அளவுக்கு இல்லை. எனவே பெறுகை வழிகாட்டிக் கோவையின் 1.2.1 ஆம் இலக்கத்தில் குறிப்பிடப்பட்ட அனைத்து தேவைப்பாட்டினையும் அடைந்து கொள்வதற்கு இதன் மூலம் வாய்ப்பு இல்லை. எவ்வாறாயினும் உரிய விவரக்குறிப்புக்களுக்கான சட்ட விதிகளுக்கு இணங்க வெளிப்படைத் தன்மை ஏற்படும் வகையில் உரிய கொள்வனவு செய்தல் இடம் பெற்றுள்ளது. |

### 3.11 சச்சரவுத் தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபைகள் மற்றும் உள்ளுராட்சி அமைச்சின் பயன்பாட்டிற்காக 2010 ஒக்தோபர் 25 ஆந் திகதி சனாதிபதி செயலகத்தின் குண்டு துளைக்காத ஜீப் வழங்கப்பட்டிருந்தது. முன்னாள் அமைச்சரின் ஆலோசணையின் பேரில் அந்த வாகனத்தை திருத்தம் செய்வதற்காக உள்நாட்டு முகவர் நிறுவனத்திற்கு 2014 யூன் 11 ஆந் திகதி அனுப்பிவைக்கப்பட்டிருந்ததுடன் வாகனத்தில் சேதம் ஏற்பட்டுள்ள முன்பக்கம் மற்றும் பின்பக்க கண்ணாடிகளை புதிதாக இடுவதற்காக ரூபா 16.22 மில்லியன் மதிப்பீடு சமர்ப்பிக்கப்பட்டுந்தது. எவ்வாறாயினும் திருத்தம் செய்வதற்கான ரூபா 3.23 மில்லியன் விலைப்பட்டியல் 2015 செப்தெம்பர் 30 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தும் நிதி ஏற்பாடு இல்லாததன் காரணத்தால் கொடுப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. இக்கொடுப்பனவை மேற்கொண்டு வாகனத்தை பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தும் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளக் கூடிய நிலையில் காணப்படாததுடன் அவ்வாறான வாகனத்தை பயன்படுத்தும் தேவைப்பாடும் இல்லை என்பது அவதானிக்கப்பட்டது. | நட்டங்கள் சேதங்கள் சம்பந்தமாக முறையான விசாரணைகள் மேற்கொள்ளல் மற்றும் வாகனத்தை ஒப்படைத்தல் இடம்பெறுதல் வேண்டும் | இந்த ஜீப்பை சனாதிபதி செயலகத்திற்கு ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தும் அந்த அலுவலகம் இதுவரை அதற்காக முன்வந்திருக்கவில்லை. |

### 4. கணக்காய்வு மற்றும முகாமைத்துவக் குழு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டிற்காக 3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்கள் மாத்திரம் நடைபெற்றன | காலாண்டு அடிப்படையில் ஒரு ஆண்டிற்கு 4 கூட்டங்கள் நடாத்தப்படுதல் | நிர்ணயிக்கப்பட்ட தடவைகள் கூட்டங்களை நடாத்துவதற்கு நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| | வேண்டும் | எடுக்கப்படும் |

**5. மனித வளங்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அமைச்சின் 65 பல்வேறு பதவிகளுக்காகக் காணப்படுகின்ற வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | நடவடிக்கை எடுக்பபட்டு வருகின்றது. |